# இராமேஸ்வரம் நகர் மன்றக் கூட்டம்

# 2023 ஆம் ஆண்டு மே மாதம் 22ம் தேதி காலை 11: 00 மணிக்கு நடைபெற்ற

# நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கை

## முன்னிலை: கே.இ. நாசர்கான்.,

## நகர்மன்றத் தலைவர், இராமேஸ்வரம் நகராட்சி

| பொருள் எண் | பொருள்விபரம் | தீர்மானவிபரம் |
|---|---|---|
| 1 | இராமேஸ்வரம் நகராட்சியினை இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலையாக தரம் உயர்த்தப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு தரம் உயர்த்தப்பட்ட அரசாணை (நிலை) எண் : 57 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 02/05/2023 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :**<br>• மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | தீர்மானம் எண். 376 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| **2** | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட தனுஷ்கோடி பகுதியில் பூர்வீக குடி மக்களில் ஒருவராக பிறந்து வாழ்ந்து மறைந்த சுதந்திர போராட்ட வீரர் தியாகி.அ.அய்யாச்சாமி அவர்களை நினைவு கூறும் வகையில் நினைவுசின்னம் அமைக்க நகர்மன்றத்தலைவர் அவர்களால் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது. | தீர்மானம் எண். 377 அனுமதிக்கப்பட்டது. |
| **3** | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட சிவகாமி நகர் பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான மயானத்தினை மறுசீரமைப்பு செய்வதற்கு மகராஜ் சுவாமிகள் அவர்கள் சேவையாக செய்துதருவதாக முன்வந்துள்ளார். எனவே, மேற்காணும் சிவகாமி நகர் மயானத்தினை மகராஜ் சுவாமிகள் அவர்கள் மூலமாக மறு சீரமைப்பு செய்வதற்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 100% தனிநபர் பங்களிப்புடன் செயல்படுத்திட நகர்மன்றத்தலைவர் அவர்களால் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது. | தீர்மானம் எண். 378 அனுமதிக்கப்பட்டது. |
| **4** | இராமேஸ்வரம் நகராட்சியினை இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலையாக அரசாணை (நிலை) எண் : 57 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 02/05/2023 தரம் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, இராமேஸ்வரம் நகராட்சியில் நகர புல எண் உருவாக்கப்பட்டு, தனியாக ஒரு நில அளவையரை அயற்பணி (deputation) அடிப்படையில் பணியமர்த்தகோரியும், மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண். 379 அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>2. முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாலும், நகராட்சியின் பரப்பளவை கருத்தில் கொண்டு தனியாக நகரபுலன் உருவாக்கப்பட்டு நிலஅளவையரை அயற்பணி அடிப்படையில் பணிபார்க்க மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களுககு உரிய பிரேரணை அனுப்பலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>5</td>
<td>இராமேஸ்வரம் நகராட்சியில் நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT)-2022-23-ம் நிதியாண்டு பொதுநிதியின் கீழ் பழுதடைந்த சாலைகளினை தார்சாலை மற்றும சிமெண்ட் சாலைகளாக மாற்றிடும் பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பித்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் காணொலி காட்சி ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்படி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள சாலைப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்றிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அலுவலக தொலைப்பேசியின்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள் செய்திட ரூ.132.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணிகளின் விபரம் பின்வருமாறு
<table>
<tr><th>S. No</th><th>Name of Work</th><th>Length in ‘Km’</th><th>Width in ‘m’</th><th>Estimate Amount (Rs. in lakh)</th></tr>
<tr><td>1</td><td>Providing BT Surface by using Paver Machine at Olaikuda OHT Road (136004R203)</td><td>2.000</td><td>4.30</td><td>48.00</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண். 380 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | Providing CC Pavement at Sivagami Nagar Main Road West Cross 1 (136002S063), Kalavai West Cross (136005L166), Ithi Street Cross (136006L177), Pallivasal West (136012R080), Manthoppu Cross Road 1 (136016L007), Manthoppu Cross Road 2 (136016L008), Madasamy Temple West Cross (136016L181), Manthoppu North (136016S163), Ismayil Thoppu (136016L180), Verkodu Main East (136017S167) and Pulithevan Nagar North (136017S012) | 1.105 | 2.00m, 2.20m, 3.00m, 3.30m, 3.50m, 3.80m, 5.00m | 43.00 |
| 3 | Providing CC Pavement at Natarajapuram South Cross 1 (136019L053), Natarajapuram South Cross 2 (136019L054), Natarajapuram South Cross 3 (136019S031), Ramakrishnapuram Cross Street 1 From Right Side Of Main Road (136020L051), Ramakrishnapuram Nh Road 2nd Cross (136020S185), Ramakrishnapuram 1st Cross East-South 1 (136020L198), Ramakrishnapuram Oht West Road (136020S180), Ramakrishnapuram Right Side 1st Cross East (136020S183) and Ramakrishnapuram Cross Street 2 From Right Side Of Main Road (136020L052) | 1.180 | 1.60, 2.00, 2.30, 2.50, 2.60, 3.00, 3.40, 3.80 | 41.00 |
| **Total** | | **4.285** | | **132.00** |

**அலுவலக குறிப்பு :-**

| | | |
|---|---|---|
| | 1. அனுமதிக்கலாம். 2022-23-ம் நிதியாண்டு வருவாய் நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளலாம்.<br>2. மேற்காணும் பணி திட்டப்பணி என்பதால், அவசர அவசியம் கருதியும் மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களிடம் மதிப்பீடு சமர்ப்பித்து நிர்வாக அனுமதி பெற்றிட மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| **6** | இராமேஸ்வரம் நகராட்சிக்கு சொந்தமான பயணியர் தங்கும் இடம் கட்டிடத்தின் ஒரு பகுதியினை ஒருங்கிணைந்த சமையற்கூடம் கட்டிடமாக மாற்றிடும் ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு பணிக்கு 23-03-2023-ம் தேதியின்று நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று 11-04-2023 அன்று முதன்முதலாக மின்னனு வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>1. M/S ஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்ஷன், 4, அரண்மனை ராமசாமி, கொத்தனார் மேலத்தெரு, இராமநாதபுரம். — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.12% குறைவு | தீர்மானம் எண். 381 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 2. M/S வெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஷன், 97/1, யாதவா தெரு, வெளிப்பட்டினம் (Post), இராமநாதபுரம்.. — மதிப்பீட்டினைக்காட்டிலும் 3.32% அதிகம்<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br><br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.12% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/S ஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்ஷன், இராமநாதபுரம் நிறுவனத்தின் விலைவிகிதத்தினை ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதியும், மேற்காணும் பணியின் முன்னேற்றம் குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் காணொலி காட்சி ஆய்வுக்கூட்டத்தில், அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.. | |
| **7** | இராமேஸ்வரம் நகராட்சி வார்டு எண்.16 இந்திரா நகர் மேற்கு பக்க சாலையில் சிமெண்ட் தளம் அமைக்கும் ரூ.4.95 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு பணிக்கு 13-01-2023-ம் தேதிய தீர்மானம் எண்.258-ன் படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதைத் தொடர்ந்து 13-04-2023 அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண். 382 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 1. M/S RNK Developments & Constructions Pvt Ltd, இராமேஸ்வரம். — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.39% குறைவு<br>2. திரு.மீரான்கனி, ஒப்பந்ததாரர், தங்கச்சிமடம். — மதிப்பீட்டினைக்காட்டிலும் 1.10% அதிகம்<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br><br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.39% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/S RNK Developments & Constructions Pvt Ltd, இராமேஸ்வரம் நிறுவனத்தின் விலைவிகிதத்தினை ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் போக்குவரத்து நலன் கருதியும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| **8** | இராமேஸ்வரம் நகராட்சி பகுதிக்கு மத்திய பிரதேசம் துணை செயலர் அவர்கள் வருகை புரிந்த 23/02/2023 மற்றும் 24/02/2023 தேதிகளில் அரசின் விருந்தினர் தங்கும் விடுதிக்கும் ஈப்பு வாகனம் மற்றும் உணவு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் | தீர்மானம் எண். 383 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | உத்தரவின்படி, அரசு விருந்தினர் மாளிகையில் துணை ஆணையர் தங்குவதற்கு உகந்ததாக இல்லாத காரணத்தினால் தனியார் ஹோட்டல் தங்குவதற்கும் மற்றும் உணவு ஏற்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து ஈப்பு வாகனம் தனியாரிடம் வாடகை வண்டி ஏற்பாடு செய்யப்பட்டு இராமேஸ்வரம் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் மதுரை விமான நிலையம் சென்றுவர செலவினம் வருவாய் ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்டது. எனவே, வருவாய் ஆய்வாளரின் குறிப்பின்படி செலவின தொகை ரூ.14500/-ஐ வழங்க வேண்டி நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br><br>1. அனுமதிக்கலாம். | |
| **9** | இராமேஸ்வரம் நகராட்சியில் பணிபுரியும் தூய்மைப்பணியாளர்கள் மற்றும் கடைநிலை பணியாளர்களுக்கு 2022-2023ம் ஆண்டிற்கு சீருடை வழங்குவதற்கு ஆகும் செலவினம் ரூ.62407.80ஐ The Tamilnadu Handloom Wear's Co-Operative Society Ltd நிறுவனத்திற்கு செலுத்த நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :-**<br><br>• அனுமதிக்கலாம். | தீர்மானம் எண். 384 அனுமதிக்கப்பட்டது. |
| **10** | இராமேஸ்வரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் மற்றும் வடகாடு பகுதிகளில் அமைந்துள்ள 4 எண்ணம் நுண் உரகுடில் உரம் மாதிரி பகுப்பாய்வு கட்டணம் ரூ.15400/-ஐ VCS | தீர்மானம் எண். 385 அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>Commercial Seed Production Agronomy நிறுவனத்திற்கு செலுத்த நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு :-<br>1. அனுமதிக்கலாம்<br>2. பொதுசுகதாரபணியின் அவசர அவசியம் கருதி நுண் உரகுடில் உரம் மாதிரி பகுப்பாய்வு செய்ய கட்டணம் செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>11</td>
<td>இராமேஸ்வரம் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் உள்ள கடைகளை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு 11/04/2023 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர், உயர் ஏல கேள்வி கேட்ட நபர்களின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஏலக்கேள்வி</th></tr>
<tr><td>1</td><td>S.ராமநாதன்,<br>திட்டக்குடித்தெரு,<br>இராமேஸ்வரம்</td><td>ரூ.225000 /-</td></tr>
<tr><td>2</td><td>I. முகம்மது ரியாஸ் கான்,<br>செட்டியார் தெரு,<br>இராமேஸ்வரம்.</td><td>ரூ.224000 /-</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண். 386<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :-**<br><br>1. மேற்காணும் பணிக்கு அதிக பட்ச ஏலக்கேள்வி ரூ.225000/- கோரிய திரு.S.இராமநாதன் ஒப்பந்ததாரரின் ஏலக்கேள்வியினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 12 | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 10 வார்டுகளில் குடிநீர் பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் அடைப்பு மற்றும் உடைப்புகளை சரி செய்யும் ரூ.4.90 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு பணிக்கு 17-03-2023-ம் தேதியின்று நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று 11-04-2023 அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண். 387<br>அனுமதிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 1. M/S RNK Developments & Constructions Pvt Ltd,<br>இராமேஸ்வரம். | மதிப்பீட்டினைக்காட்டிலும்<br>0.32% குறைவு |
| 2. திரு.மீரான்கனி,<br>ஒப்பந்ததாரர்,தங்கச்சிமடம். | மதிப்பீட்டினைக்காட்டிலும்<br>1.24% அதிகம் |

<table>
<tr><td></td><td>

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.32% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/S RNK Developments & Constructions Pvt Ltd, இராமேஸ்வரம் நிறுவனத்தின் விலைவிகிதத்தினை ஏற்கலாம்.

2. அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் குடிநீர் விநியோக நலன் கருதியும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

</td><td></td></tr>
<tr><td>13</td><td>

இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட 11 முதல் 21 வார்டுகளில் குடிநீர் பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் அடைப்பு மற்றும் உடைப்புகளை சரி செய்யும் ரூ.4.90 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு பணிக்கு 24-03-2023-ம் தேதியின்று நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று 18-04-2023 அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><td>திரு.மீரான்கனி,<br>ஒப்பந்ததாரர்,<br>தங்கச்சிமடம்.</td><td>மதிப்பீட்டினைக்காட்டிலும்<br>0.48% குறைவு</td></tr>
<tr><td>M/S RNK Developments & Constructions Pvt Ltd,<br>இராமேஸ்வரம்.</td><td>மதிப்பீட்டினைக்காட்டிலும்<br>1.31% அதிகம்</td></tr>
</table>

</td><td>தீர்மானம் எண். 388<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு :-</u>**<br><br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.48% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திரு.மீரான்கனி, தங்கச்சிமடம் நிறுவனத்தின் விலைவிகிதத்தினை ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் குடிநீர் விநியோக நலன் கருதியும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| **14** | இராமேஸ்வரம் நகராட்சியில் அலுவலகத்திற்கு தேவையான அலுவலக பதிவேடுகள் மற்றும் எழுது பொருட்கள் வாங்கிய வகையில் ரு.105080/- ஆகும். நகர்மன்ற அனுமதி இருப்புத்தொகை ரூ.89304/- போக மீதி செலவினத்தொகை ரூ.15776/-க்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :-**<br><br>1. அனுமதிக்கலாம் | **தீர்மானம் எண். 389 அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr><td>15</td><td>இராமேஸ்வரம் நகராட்சிக்கு தேவையான அலுவலக பதிவேடுகள் , எழுது பொருட்கள் மற்றும் கணினி டோனர்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3.00 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு :-<br><br>1. அனுமதிக்கலாம்</td><td>தீர்மானம் எண். 390 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>16</td><td>இராமேஸ்வரம் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் , சுகாதாரப்பணிக்கு , கீழ்காணும் விபரப்படி தேவைப்படுவதால், அதனை வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கும், பொதுசுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்திட நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><table><tr><th>வ.எண்</th><th>பொருட்கள்</th><th>அளவு</th></tr><tr><td>1</td><td>நிலவேம்பு குடிநீர் பொடி</td><td>600 KG</td></tr></table><br>அலுவலக குறிப்பு :-<br><br>• அனுமதிக்கலாம்<br>• பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண். 391 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

**17**

இராமேஸ்வரம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான கீழ்காணும் விபரப்படி பொதுசுகாதாரப்பொருட்களை விநியோகிக்க ஒப்பந்தப்புள்ளிகள் 19-04-2023 தேதி கோரப்பட்டதில், இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்களின் பெயர் | Sri Balaji Marketing | | Sree Thai Mookambika Export | |
|---|---|---|---|---|---|
| | | விலை விகிதம் | அளவு | விலை விகிதம் | அளவு |
| 1 | நிலவேம்பு குடிநீர் பொடி | 1300 | 1KG | 1190 | 1KG |

**அலுவலக குறிப்பு :-**

- அனுமதிக்கலாம்
- வரிசை எண் (1) பொருளுக்கு குறைவான விலைவிகிதம் Sree Thai Mookambika Export நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
- பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, சப்ளை உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 392 அனுமதிக்கப்பட்டது.

**18**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண் 8345/2023/எம்ஏ2, 10/04/2023 தேதிய கடிதத்தில், நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் நகராட்சி எல்லைக்குட்பட்டுள்ள பள்ளி,

தீர்மானம் எண். 393 அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | கட்டிடங்கள், நீர் நிலைகள், குளங்கள், தொட்டிகள், ஊரணிகள், பூங்காக்கள் விளையாட்டு மைதானங்கள் மற்றும் பிற சொத்துகளை நகராட்சியின் வசம் ஒப்படைக்கப்படாமல் ஊராட்சி ஒன்றியங்களின் வசம் இருந்து வருவதால், வளர்ச்சி திட்டங்களை நடைமுறைபடுத்துவதில் இடையூறுகள் ஏற்படுவதால், நகராட்சிகள் வசம் ஒப்படைப்பு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>எனவே, இராமேஸ்வரம் நகராட்சி எல்லைக்குட்பட்டுள்ள பகுதிகளில் அமைந்துள்ள மண்டபம் ஊராட்சி ஒன்றியம் வசம் உள்ள நகராட்சிக்கு பாத்தியப்படவேண்டிய சொத்துகளை இந்நகராட்சி வசம் ஒப்படைக்க மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பிட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :-<br>• அனுமதிக்கலாம் | |
| **19** | இராமேஸ்வரம் நகராட்சிக்கு 2022-23-ம் நிதியாண்டு 15-வது நிதிக்குழு மான்ய திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள Un-Tied Grant தலைப்பின் கீழ் தொகுப்பு I தார் சாலைப்பணி ரூ.49.00 இலட்சமும், தொகுப்பு II சிமெண்ட் சாலைப்பணி ரூ.41.80 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.90.80 இலட்சத்திற்கு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து மண்டல செயற்பொறியாளர், மதுரை அவர்களின் செயல்முறைக்கடிதம் ந.க.எண்.3096/2022/பி2 நாள்.24-03-2023-ன் படி மேற்காணும் தொகுப்பு I தார் சாலை மற்றும் தொகுப்பு II சிமெண்ட் சாலைப்பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி தொகுப்பு I தார் சாலைப்பணிக்கு 12-04-2023 அன்று | தீர்மானம் எண். 394<br>அனுமதிக்கப்பட்டது. |

முதன்முதலாக மின்னனு வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மின்னனு வாயிலாக வரப்பெற்றன.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கலந்தாய்வுக்குழு மூலம் 13-04-2023 அன்று தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் தொழில்நுட்ப தகுதிகள் இருந்ததால், தொகுப்பு I தார் சாலைப்பணிக்கு 17-04-2023 அன்று மாலை 3.30 மணியளவில் விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு, ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**Name of work :- Providing BT Surface by using Paver Machine at Gas Godown - Sambai Link Road (136008R156), Semmamadam North Main (136011R123) and Rajeev Gandhi Nagar West Cross Link Road (136001R116) – Package-I**

| | | |
|---|---|---|
| 1. | M/S ஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்ஷன்,<br>4, அரண்மனை ராமசாமி,<br>கொத்தனார் மேலத்தெரு,<br>இராமநாதபுரம். | மதிப்பீட்டினைக்காட்டிலும்<br>0.004% குறைவு |
| 2. | M/S வெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஷன்,<br>97/1, யாதவா தெரு,<br>வெளிப்பட்டினம் (Post),<br>இராமநாதபுரம். | மதிப்பீட்டினைக்காட்டிலும்<br>30.757% அதிகம் |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.004% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/S ஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்ஷன், இராமநாதபுரம் நிறுவனத்தின் விலைவிகிதத்தினை ஏற்கலாம்.<br>3. அவசர அவசியம் கருதியும், அரசின் திட்டப்பணியினை விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியுள்ளதால் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று தொகுப்பு I தார் சாலைப்பணிக்கு Letter of Acceptance கடிதம் வாயிலாக 1% கூடுதல் டெபாசிட் தொகையினை வங்கி வரைவோலையாக (DD) செலுத்தக் கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| **20** | இராமேஸ்வரம் நகராட்சிக்கு 2022-23-ம் நிதியாண்டு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் பொதுநிதியின் கீழ் தொகுப்பு I தார் சாலைப்பணி ரூ.48.00 இலட்சமும், தொகுப்பு II சிமெண்ட் சாலைப்பணி ரூ.43.00 இலட்சமும் மற்றும் தொகுப்பு III சிமெண்ட் சாலைப்பணி ரூ.41.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.132.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மண்டல செயற்பொறியாளர், மதுரை அவர்களின் செயல் முறைக்கடிதம் ந.க.எண்.850/2023/பி2 நாள். 10-04-2023-ன் படி மேற்காணும் தொகுப்பு I தார் சாலை மற்றும் தொகுப்பு II மற்றும் தொகுப்பு III சிமெண்ட் சாலைப்பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி | தீர்மானம் எண். 395<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
தொகுப்பு II சிமெண்ட் சாலைப்பணிக்கு 26-04-2023 அன்று முதன்முதலாக மின்னனு வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மின்னனு வாயிலாக வரப்பெற்றன.<br><br>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கலந்தாய்வுக்குழு மூலம் 27-04-2023 அன்று தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் தொழில்நுட்ப தகுதிகள் இருந்ததால், தொகுப்பு II சிமெண்ட் சாலைப்பணிக்கு 02-05-2023 அன்று மாலை 3.30 மணியளவில் விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு, ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>
Name of work :- Providing CC Pavement at Sivagami Nagar Main Road West Cross 1 (136002S063), Kalavai West Cross (136005L166), Ithi Street Cross (136006L177), Pallivasal West (136012R080), Manthoppu Cross Road 1 (136016L007), Manthoppu Cross Road 2 (136016L008), Madasamy Temple West Cross (136016L181), Manthoppu North (136016L252), Ismayil Thoppu (136016L180), Verkodu Main East (136017S167) and Pulithevan Nagar North (136017S012) – Package-II<br><br>
<table>
<tr><td>1.</td><td>M/S பெருமாள் மூர்த்தி கன்ட்ரக்ஷன்,<br>தரைதளம், 13/2690, ஆத்மசாமி நகர் 3வது தெரு,<br>பட்டினம்காத்தான்,இராமநாதபுரம்.</td><td>மதிப்பீட்டினைக்காட்டி லும் 13.82% அதிகம்</td></tr>
</table>
</td>
<td></td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 2. | M/S ஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்ஷன்,<br>4, அரண்மனை ராமசாமி,<br>கொத்தனார் மேலத்தெரு,<br>இராமநாதபுரம். | மதிப்பீட்டினைக்காட்டிலும் 64.16% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல் விலையில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/S பெருமாள் மூர்த்தி கன்ட்ரக்ஷன், (மதிப்பீட்டினைக்காட்டிலும் 13.82% அதிகம்) நிறுவனத்தின் விலைவிகிதத்தினை குறைத்து (Negotiation) தருமாறு சம்மதக்கடிதம் 02-05-2023 அன்று கோரியதில் மேற்படி நிறுவனம் தனது 04-05-2023-ம் தேதிய கடிதத்தில் 13.82% அதிகம் என்ற விலைவிகிதத்திலிருந்து 0.01% குறைவு என்ற விலைவிகிதத்தில் செய்து தருவதாக கடிதம் அளித்துள்ளது. மேற்படி நிறுவனத்தின் விலைவிகிதத்தினை ஏற்று, Letter of Acceptance கடிதம் வாயிலாக 1% கூடுதல் டெபாசிட் தொகையினை வங்கி வரைவோலையாக (DD) செலுத்தக் கோரலாம். மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. M/S பெருமாள் மூர்த்தி கன்ட்ரக்ஷன், இராமநாதபுரம் நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.01% குறைவு என்ற விலைவிகிதத்தினை ஏற்கலாம்.
3. அவசர அவசியம் கருதியும், அரசின் திட்டப்பணியினை விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியுள்ளதால் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று M/S பெருமாள்

| | | |
|---|---|---|
| | மூர்த்தி கன்ட்ரக்ஷன், இராமநாதபுரம் நிறுவனத்தினை தொகுப்பு II சிமெண்ட் சாலைப்பணிக்கு Letter of Acceptance கடிதம் வாயிலாக 1% கூடுதல் டெபாசிட் தொகையினை வங்கி வரைவோலையாக (DD) செலுத்தக் கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| **21** | இராமேஸ்வரம் நகராட்சிக்கு 2022-23-ம் நிதியாண்டு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் பொதுநிதியின் கீழ் தொகுப்பு I தார் சாலைப்பணி ரூ.48.00 இலட்சமும், தொகுப்பு II சிமெண்ட் சாலைப்பணி ரூ.43.00 இலட்சமும் மற்றும் தொகுப்பு III சிமெண்ட் சாலைப்பணி ரூ.41.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.132.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து மண்டல செயற்பொறியாளர், மதுரை அவர்களின் செயல்முறைக்கடிதம் ந.க.எண்.850/2023/பி2 நாள்.10-04-2023-ன் படி மேற்காணும் தொகுப்பு I தார் சாலை மற்றும் தொகுப்பு II மற்றும் தொகுப்பு III சிமெண்ட் சாலைப்பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி தொகுப்பு III சிமெண்ட் சாலைப்பணிக்கு 26-04-2023 அன்று முதன்முதலாக மின்னனு வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மின்னனு வாயிலாக வரப்பெற்றன.<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கலந்தாய்வுக்குழு மூலம் 27-04-2023 அன்று தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் தொழில்நுட்ப தகுதிகள் இருந்ததால், தொகுப்பு III சிமெண்ட் சாலைப்பணிக்கு 02-05-2023 அன்று மாலை 3.30 மணியளவில் விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு, ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண். 396 அனுமதிக்கப்பட்டது. |

**Name of work :- Providing CC Pavement at Natarajapuram South Cross 1 (136019L053), Natarajapuram South Cross 2 (136019L054), Natarajapuram South Cross 3 (136019S031), Ramakrishnapuram Cross Street 1 From Right Side Of Main Road (136020L051), Ramakrishnapuram Nh Road 2nd Cross (136020S185), Ramakrishnapuram 1st Cross East-South 1 (136020L198), Ramakrishnapuram Oht West Road (136020S180), Ramakrishnapuram Right Side 1st Cross East (136020S183) and Ramakrishnapuram Cross Street 2 From Right Side Of Main Road (136020L052) – Package-III**

| | | |
|---|---|---|
| 1. | M/S ஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்ஷன்,<br>4, அரண்மனை ராமசாமி,<br>கொத்தனார் மேலத்தெரு,<br>இராமநாதபுரம். | மதிப்பீட்டினைக்காட்டிலும்<br>0.001% குறைவு |
| 2. | M/S வெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஷன்,<br>97/1, யாதவா தெரு,<br>வெளிப்பட்டினம் (Post),<br>இராமநாதபுரம். | மதிப்பீட்டினைக்காட்டிலும்<br>62.03% அதிகம் |

<u>**அலுவலக குறிப்பு**</u>

1. அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| | 2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.001% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/S ஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்ஷன், இராமநாதபுரம் நிறுவனத்தின் விலைவிகிதத்தினை ஏற்கலாம்.<br>3. அவசர அவசியம் கருதியும், அரசின் திட்டப்பணியினை விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியுள்ளதால் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று தொகுப்பு III சிமெண்ட் சாலைப்பணிக்கு Letter of Acceptance கடிதம் வாயிலாக 1% கூடுதல் டெபாசிட் தொகையினை வங்கி வரைவோலையாக (DD) செலுத்தக் கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| **22** | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளுக்கும் தினசரி குடிநீர் விநியோகம் செய்வதற்கும் 22 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை இயக்குவதற்கும் மேலும் குடிநீர் நீரேற்று நிலையங்கள் மற்றும் மேல்நிலை தொட்டிகள் காவலர்பணி மற்றும் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்து வருவதற்கும் 22 நபர்கள் அடங்கிய விவோகனந்தர் ஆடவர் சுயஉதவிக்குழு மூலம் செயல்படுத்திடவும், நபர்களுக்கான ஊதியத்தினை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்: A3/614/2021 நாள் : 25-06-2022 ன் படியும் 2022-2023 ஆண்டு மாவட்ட ஆட்சியர் இராமநாதபுரம் அவர்களின் தரவிலை பட்டியல் அட்டவணைப்படி மே 2023 முதல் ஜீலை 2023 மாத காலம் வரை ஒப்பந்த அடிப்படையில் ஊதியம் வழங்கிட ஆகும் உத்தேச | தீர்மானம் எண். 397<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | செலவினத்தொகை ரூ.10.இலட்சத்திற்கு நகர் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br><br>• அனுமதிக்கலாம், குடிநீர் விநியோக நிதியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.<br>• அவசர அவசியம் கருதியும் பொதுமக்களுக்கு தடையின்றி தொடர்ந்து குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீர் கட்டண வசூல் , புதிய இணைப்புகளுக்கான விண்ணப்பங்கள் பெறுதல் போன்ற பணியினை செய்து வர வேண்டியுள்ளதாலும், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 22 நபர்களை விவேகானந்த ஆடவர் சுயஉதவிக்குழு மூலம் பணி செய்து வரவும் அனுமதிக்கலாம். | |
| **23** | இராமேஸ்வரம் நகராட்சியில் 2022-23-ம் நிதியாண்டு உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி (Infrastructure and Amenities Fund) திட்டத்தின் கீழ் அக்னிதீர்த்தம் கடற்கரை முதல் துறைமுக வீதி வரை சுமார் 1400.00மீட்டர் நீளம் மற்றும் 16.00மீட்டர் அகலம் கொண்ட சாலை அமைக்கும் பணிக்கு அரசாணை எண்.27, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.சி.7) நாள்.22-02-2023-ன் படி ரூ.24.80 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.001/2022/DO1 நாள்.14-03-2023-ன் படி மேற்காணும் பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | தீர்மானம் எண். 398 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.22232/2022/TP-2, நாள்.17-03-2023-ன் படி மேற்படி சாலைப்பணி CRZ-Coastal Regulation Zone-ல் அமைவதால் அதற்கு முன் ஒப்புதல்(Clearance) பெற்றிட தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்படி அமையவிருக்கும் சாலை கடற்கரை பகுதியில் வருவதால் கடலோர மண்டல மேலாண்மை குழுவின் (Coastal Regulation Zone Committee) முன் ஒப்புதல் (Clearance) பெறப்பட வேண்டும். எனவே இப்பணிக்கு CRZ Clearance குறித்து திட்ட அறிக்கை தயார் செய்திட INSTITUTE OF REMOTE SENSING, ANNA UNIVERSITY, CHENNAI நிறுவன கடிதத்தில் ரூ.2,95,000/- ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. அனுமதிக்கலாம். 2023-24-ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.<br>2. மேற்காணும் பணி அரசின் திட்டப்பணி என்பதால், காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| **24** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சமூக நலத்துறையின் மான்ய கோரிக்கையின்போது, அரசுப்பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் சிறப்புத்திட்டத்தினை அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, உள்ளாட்சி அமைப்புகளில் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திட ஏதுவாக தோராய செலவினம் மற்றும் ஒருங்கிணைந்த சமையற் கூடங்களுக்கான கட்டிடம் மற்றும் காலியிடம் | தீர்மானம் எண். 399<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | கண்டறியப்பட்ட விபரங்களை சமர்ப்பித்திட கேட்டு வரப்பெற்றுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அதன்படி, இராமேஸ்வரம் நகராட்சி வார்டு எண்.11, பேருந்து நிலையம் பின்புறம் உள்ள பயணியர் தங்கும் இட (DORMITORY BUILDING) கட்டிடத்தினை ஒருங்கிணைந்த சமையற் கூடமாக மாற்றிட தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தில் Kitcken Room,Wash Room, Store Room, Vessel Room, Panting Room, Gas Store போன்ற பணிகள் மேற்கொள்ள ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், நிர்வாக அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br><br>1. அனுமதிக்கலாம். 2022-2023ம் ஆண்டு ஆரம்ப கல்வி நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யலாம்.<br>2. அவசர அவசியம் கருதியும், அரசின் திட்டப்பணியினை விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீரிக்கலாம். | |
| **25** | இராமேஸ்வரம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் JCB ஓட்டுநர்களுக்கான ஊதியம் மாவட்ட ஆட்சியரின் விலைவிகிதப்பட்டியல் pdl.A3/614/2022 நாள் 25/06/2022 ன்படி ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.614 வழங்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண். 400<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :-**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம். | |
| **26** | இராமேஸ்வரம் நகராட்சியில் 2022-23-ம் நிதியாண்டு உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி (Infrastructure and Amenities Fund) திட்டத்தின் கீழ் அக்னிதீர்த்தம் கடற்கரை முதல் துறைமுக வீதி வரை சுமார் 1400.00மீட்டர் நீளம் மற்றும் 16.00மீட்டர் அகலம் கொண்ட சாலை அமைக்கும் பணிக்கு அரசாணை எண்.27, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.சி.7) நாள்.22-02-2023-ன் படி ரூ.24.80 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதைத்தொடர்ந்து தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.001/2022/DO1 நாள்.14-03-2023-ன் படி மேற்காணும் பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.22232/2022/TP-2, நாள்.17-03-2023-ன் படி மேற்படி சாலைப்பணி CRZ-Coastal Regulation Zone-ல் அமைவதால் அதற்கு முன் ஒப்புதல்(Clearance) பெற்றிட தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்படி அமையவிருக்கும் சாலை கடற்கரை பகுதியில் வருவதால் கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தில் (Coastal Regulation Zone-CRZ) அனுமதி பெற வேண்டியுள்ளது. மேலும், மாவட்ட கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் (District Coastal Zone Management Authority-DCAMA) மற்றும் தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்திடம் (Tamil Nadu | தீர்மானம் எண். 401<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | State Coastal Zone Management Authority-TNSCZMA) மேற்படி CRZ தொடர்பான அறிக்கைகள் மற்றும் தொழில்நுட்ப விளக்க காட்சிகளை தயார் செய்து சமர்ப்பித்து பரிந்துரை பெற்று தேசிய கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் (National Coastal Zone Management Authority-NCZMA), சுற்றுச்சுழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் (Ministry Of Environment, Forest And Climate Change-MoEFCC), புது டெல்லியில் ஒப்புதல் (Obtaining) பெற வேண்டியுள்ளது.<br><br>அதில் முதற்கட்டமாக மாவட்ட கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்திடம் CRZ தொடர்பான அறிக்கைகள் மற்றும் தொழில்நுட்ப விளக்க காட்சிகளை தயார் செய்யும் பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளுக்கு கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில், கீழ்கண்டவாறு பணி தேர்வு செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், நிர்வாக அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | |

| S.No | Name of Work | Estimate Amount (Rs.) |
|---|---|---|
| 1 | Conducting EIA study, report submission and recommendation from District Coastal Zone Management (DCZMA), Ramanathapuram for the Construction of New Access cum Diversion road with Retaining wall from Agnitheertham to BSNL Office (136006R094) & (136006R095) in Rameswaram Municipality, Rameswaram, Tamil Nadu. | 8,85,000.00/- |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :-**<br>1. அனுமதிக்கலாம். மேற்காணும் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையினை 2023-24-ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.<br>2. மேற்காணும் பணி அரசின் திட்டப்பணி என்பதால், காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| **27** | இராமேஸ்வரம் நகராட்சியில் முதலைமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டத்தின் கீழ் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு காலை உணவு வழங்கிடும் வகையில் பேருந்து நிலையத்தில் உள்ள பயணியர் தங்கும் விடுதியினை ஒருங்கிணைந்த சமையற்கூடமாக மாற்றப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் மேற்படி கட்டிடத்தில் கூடுதலாக அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது நகர்மன்றத்தலைவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டதில், கட்டிடத்தின் பின்புறமுள்ள திறந்த வெளிக்கிணற்றினை தூர் வாரி சுத்தம் செய்து அதன் மேல் தளப்பகுதியில் மூடி அமைத்திடவும், கிணற்றினை சுற்றிலும் தரைதளம் அமைத்திடவும் வேண்டியுள்ளது. மேலும், கட்டிடத்திற்கு தண்ணீர் வசதி ஏற்படுத்திடும் வகையில் புதிதாக மோட்டார் பொருத்தி, குழாய்கள் பதித்து, மும்முனை மின் இணைப்பு பெற வேண்டியுள்ளது. | தீர்மானம் எண். 402<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்படி பணிகள் மேற்கொண்டால் தான் கட்டிடத்தினை முழுமையாக பயன்பாட்டிற்கு கொண்டு வர முடியும். மேற்சொன்ன பணிகள் செய்திட ரூ.3,10,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், நிர்வாக அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :-<br>1. அனுமதிக்கலாம். 2023-24-ம் ஆண்டு ஆரம்ப கல்வி நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.<br>2. அவசர அவசியம் கருதியும், 01-06-2023-ம் தேதியில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு காலை உணவு வழங்கிட மேற்படி கட்டிடத்தினை பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |

(ஒம்) திரு.கே .இ. நாசர்கான்,

நகர்மன்றத்தலைவர்

இராமேஸ்வரம் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்,

,இராமேஸ்வரம் நகராட்சி.